அரசாங்க நிருவாகச் சுற்று நிருப இல. 1/39(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்- கொழும்பு. 7
1991, ஏப்ரல் மாதம் 23 ஆந் தேதி.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுககளின் செயலாளர்களுக்கும்,
அரசாங்கதிபர்களுக்கும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாகாண சபைகளுக்கும் தெரிவு
செய்யப் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்கள்.

---

1989.01.05ஆந் தேதியிட்ட 1/89ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தினால் திருத்தப் பெற்ற தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயம் மேலும பின்வருமாறு திருத்தப் பெறுகிறது.

02. உபபிரிவுகள் 2.3.4 ஐயும் 3.7ஐயும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பின்வருவனவற்றைப் பிரதியீடு செய்க.-

"2.3.4. அவர் உள்ளூராட்சிச் சபை ஒன்றின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் அரசாங்க சேவையில் அவரது பதவியிலிருந்து அவர் விலக வேண்ட தேவை இல்லை, ஆனால், அவர், சேவையின் அவசிய தன்மைகளுக்கு அமைய உள்ளூராட்சிச் சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதற்கு முழுச் சம்பளத்துடனான வாராமை லீவு வழங்கப்படுதல் வேண்டும்.

எவரேனும் உத்தியோகத்தர் தொருவர் அவர் மாகாண சபையின் ஓர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் அவருக்கு பின்வரும் விருப்பத் தெரி களில் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்படும.

..4

விருப்பத் தெரிவு 1 – அவர், தொடர்ந்து மாகாண சபை உறுப்பினராக இருக்கும் வரையில், முழு நேர அடிப்படையில் மா சபை உறுப்பினராகச் சேவையாற்றக் கூடிய வகையில் சம்பளமற்ற லீவில் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

விருப்பத் தெரிவு 2 – அவர், தெரிவு செய்யப்படுமிடத்து, பின்வரும் நிபந்தன களுக்கு அமைய, அரசாங்க சேவையை விட்டுவிலகி உள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(1) மாகாண சபைக்கு அவர் தெரிவு செய்யப்பட்ட நேரத்தில் அரசாங்க சேவையிலான அவரது நிலையான பதவி, ஓய்வூதியப் பிரமாணங்களின் கீ ஓய்வூதியமுள்ள ஒரு பதவியாகப் பிரகடனப்படுத் தப்பட்டிருந்தால்,

(அ) மாகாண சபைக்கு அவர் தெரிவு செய்ய பெற்ற திகதியில் அவரது பதவி ஒழிக்கப் பட்டதன் மேல் அவர் அரசாங்க சேவை யில் இருந்து ஓய்வு பெற்றிருந்தால அவர் பெற்றிருக்கக் கூடியதான அத்தகைய ஓய் வூதிய அளிப்பை அவர் ஓய்வூதியப் பிர ணங்களின் கீழ் பெறுவதற்குத் தகுதியுடைய ராதல் வேண்டும்.

(ஆ) எனினும், அத்தகைய ஓய்வு பெறுகை நலன் கள் சபையின் உறுப்பினர் என்ற அவரது நிலை முடிவுற்றதன் மேல் சபைக்கான அவரது சேவை முடிவுறுத்தப்பட்டு இருந்தா லன்றி, கொடுக்கப்படமாட்டாது.

(இ) சபையின் சேவையில் அவர் இருக்குங்கா அவர் மரணமுறும் சந்தர்ப்பத்தில் அத்தகை ஓய்வு பெறுகை நலன்கள் மாகாண சபை தேர்வுத் திகதிக்கு முந்தினம் இறந்துள் ளார் என்ற வகையில், அவரில் தங்கியிருப் போருக்குக் கொடுக்கப்படலாம்.

(11) மாகாண சபைக்கு அவர் தெரிவு செய்யப்பட்ட நேரத்தில் அவர் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரசாங் சேவை ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துபவராக இருந்திருந்தால் அவர் அக். கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்கு அவர் அரசாங்கத்தின் சம்மதத்துடன் அவரது ஒப்பந் தத்தை முடிவுறுத்தியதன் பேரில் பிற வழியிலான பதவி நீக்கம் இல்லாமல், அரசாங்க சேவையை விட்டுவிலகியவராகக் கருதப்படுவார். அத்துடன்,

(111) மாகாண சபைக்கு அவர் தெரிவு செய்யப்பட்ட நேரத்துக்கு முன்னர் அவர் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்கு சேவையாற் றுவதற்கு உடன்பட்டு இருப்பாராயின், சபைக்கான சேவையின் ஏதாவது காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தம் ஒன்றின் கடப்பாடு எதனையும் நிறை வேற்றும் நோக்கத்துக்கு அரசாங்கத்துக்கான சேவையாகக் கருதப்படும்."

"3:7 அரசியல் உரிமைகளைப் பிரயோகிக்கும் உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் உள்ளூராட்சிச் சபை ஒன்றின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால், அவர் தெரிவு செய்யப் பெற்ற உள்ளூராட்சிச் சபை அலுவலகத்துக்கு அண்மையாகவுள்ள ஒரு நிலையத்தில் சேவையாற்றுவதற்கு, சேவையின் அவசரத் தன்மை ஒழுக்காற்றுத் தேவைகளுக்கு அமைய, அவருக்குச் சலுகை வழங்கப்படுதல் வேண்டும். அவர், அந்த மாகாண சபையின் அல்லது உள்ளூராட்சிச் சபையின் உறுப்பினராகத் தொடர்ந்து தொழிற்படும் வரையில் வழக்கமான இடமாற்றங்களுக்கு உட்படமாட்டார்."

03. இந்த ஏற்பாடுகள் 1988.04.27 முதல் செயல் வலுப்பெறும்.

ஒப்பம்: ஆர். அபேரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.